**SPECIAL TOPIC: ELECTION**
சிறப்பு தலைப்பு: தெரிந்துக்கொள்ளப்படல்

தெரிந்துக்கொள்ளப்படல் ஒரு அற்புதமான கோட்பாடாகும். இருப்பினும், இது சாதகத்திற்கான அழைப்பு அல்ல, ஆனால் ஒரு சாதனமாக, மற்றவர்களின் மீட்பின் ஒரு கருவியாக அல்லது வழிமுறையாக இருக்க வேண்டும்! பழைய ஏற்பாட்டில் இந்த சொல் முதன்மையாக ஊழியத்திற்குப் பயன்படுத்தப்பட்டது; புதிய ஏற்பாட்டில் இது முதன்மையாக ஊழியத்தினால் வழங்கப்பட்ட இரட்சிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றது. தேவனின் இறையாண்மைக்கும் மனிதனின் சுதந்திரத்திற்கும் இடையிலான முரண்பாட்டை வேதம் ஒருபோதும் சரிசெய்ய முற்படவில்லை, ஆனால் அவை இரண்டையும் உறுதிப்படுத்துகிறது! வேதாகம அழுத்தத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு தேவனின் இறையாண்மை. தெரிவில் ரோமர் 9 மற்றும் மனிதனின் தேவையான பதிலில் ரோமர் 10 (ஒ.பா. ரோமர் 10: 11,13).

இந்த இறையியல் அழுத்தத்தின் திறவுகோல் எபே 1: 4 இல் காணப்படலாம். இயேசு தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர், அனைவரும் அவரிடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்(Karl Barth).வீழ்ச்சியடைந்த மனிதகுலத்தின் தேவைக்கு இயேசு தேவனின் "ஆம்" ஆவார் (Karl Barth). முற்குறிப்பின் நோக்கம் பரலோகம் அல்ல, பரிசுத்தம் (கிறிஸ்துவின் சாயல்) என்று வலியுறுத்துவதன் மூலம் எபேசியர் 1: 4ஐ தெளிவுபடுத்த உதவுகிறது. நாம் பெரும்பாலும் நற்செய்தியின் நன்மைகளுக்கு ஈர்க்கப்படுகிறோம், பொறுப்புகளை புறக்கணிக்கிறோம்! தேவனின் அழைப்பு (தெரிந்துக்கொள்ளப்படல்) இக்காலத்திற்கும் நித்தியத்திற்குமாகும்!